சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. C. ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.87/2025**

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி.B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

பெயர்: திரு. தமிழமுதன் த/பெ: கந்தசாமி

வயது: ஊர் :

தொழில்: அலைபேசி எண்:

தேதி: 08.07.2026 முகவரி:

முதல் விசாரணை...

நான் தற்போது வாதி வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்து என்னால் உண்மை என சொல்லப்பட்டவை தான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 14.10.2015 | கடன் விண்ணப்பம் | அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 30.10.2015 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் உடன்படிக்கை | அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 30.10.2015 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்தம் | அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | 28.06.2016 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்தம் | அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 31.08.2016 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்தம் | அசல் | வா.சா.ஆ.5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 27.08.2018 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்தம் | அசல் | வா.சா.ஆ.6 |
| 7 | 23.12.2016 | 1 ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடிதம் | அசல் | வா.சா.ஆ.7 |
| 8 | 17.11.2022 | பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ.8 |
| 9 | | மேற்படி அறிவிப்பை இரண்டாம்பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.9 |
| 10 | 19.11.2022 | அஞ்சலக ரசீது | அசல் | வா.சா.ஆ.10 |
| 11 | | 1 ஆம் பிரதிவாதியின் வங்கி கணக்கின் கணக்கீட்டுதாள் | அசல் | வா.சா.ஆ.11 |
| 12 | 28.03.2020 | ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வழங்கிய சுற்றறிக்கை | அசல் | வா.சா.ஆ.12 |
| 13 | 14.07.2025 | அதிகாரமளித்து வழங்கப்பட்ட கடிதம் | அசல் | வா.சா.ஆ.13 |

தாவாபடி தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதிகள் பெற்ற கடன் கல்வி கடன் என்றால் சரிதான். கல்வி கடன் எத்தனை ஆண்டு காலம் என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் 15 ஆண்டுகால திட்டமாகும். முதல் 5 ஆண்டுகள் Moratorium Period ஆகும். அந்த Moratorium Period க்கு வட்டி இல்லை என்றால் சாதா வட்டி உள்ளது.

2. கடன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்ததலிருந்து எத்தனை ஆண்டுகள் ஆகியுள்ளது என்றால் 5 ஆண்டுகள் ஆகிறது. 15 ஆண்டுகள் கழித்துதான் வழக்கு தாக்கல் செய்யமுடியும் என்றும் அதற்கு முன்பாகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

3. சிறப்பு திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட கல்வி கடனுக்கு 15 ஆண்டு

காலத்திற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. கல்வி கடன் வழங்கும்போது பிணைய ஆவணம் பெறக்கூடாது என்ற விதி உள்ளது என்றும் அதை மீறி 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனாரை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் அவர் உடன் சேர்ந்து கடன் பெற்றுள்ளார்.

4. சிறப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனை செலுத்துவதற்கு இரண்டாம் பிரதிவாதிக்கு எவ்வித கடப்பாடும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து வரப்பெற்ற வரவுகளை முறையாக பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் கடன் உயிர்ப்பு கடிதம் எழுதிவாங்கினோமா என்றால் அது தேவையில்லை.

5. சிண்டிகேட் பேங்க் இயங்கிய சமயத்தில் வழங்கப்பட்ட கடன் என்றும், பின்னர் கனரா வங்கியுடன் இணைந்த சமயத்தில் சிண்டிகேட் வங்கியில் வழங்கப்பட்ட கல்வி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்றால் சரியல்ல. தள்ளுபடியான கடனை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**அனுமதியின் பேரில் மறுவிசாரணை**

எதற்காக 15 வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் முறையாக தவணை செலுத்தாத காரணத்தால் முன்கூட்டியே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை - இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.07.08 18:02:22 +0530

Subordinate Judge,
Tiruvarur.